# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 29.08.2022 ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. 29.07.2022 ஆம் தேதியில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம் எண்.205

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம் வார்டு B, பிளாக் – 1, நகரளவை எண்.7 இல் 0.79 ½ ஏக்கர் பரப்பில் அமையும் மனைப்பிரிவின் உத்தேச சாலைகள் பரப்பு மற்றும் பொது உபயோகம் பரப்பு ஆவியவற்றினை உள்ளாட்சிக்கும் TANGEDCO விற்கு உரிய இடத்தினை மின் வாரியத்திற்கு அல்லது உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யுமாறும், ஒப்படைப்பு செய்யப்பட்ட தானபத்திரத்தின் அசலினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம்ந.க.எண்.203/2022/ஈமா2 நாள்.18.04.2022 இல் திரு.K.S. ஜெகதீசன் மனுதாரருக்கு முகவரியிட்டு இவ்வலுவலகத்திற்கு நகலிடப்பட்டு வரப்பெற்றுள்ளது.

மேற்படி உத்தேச மனைப்பிரிவு இடமானது புலத்தணிக்கை செய்யப்பட்டதில் கோபிசெட்டிபாளையம் 1–எண் இணை சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.2271/2020 நாள்.31.08.2020 இன் படி 0.3219.0 ஹெக்டேர்ஸ் புஞ்சை பூமியானது திரு.சண்முகம் மகன் திரு.K.S. ஜெகதீசன் மற்றும் வெங்கிடுசாமி மகன் திரு.பி.வி.செந்தில்குமார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகும். இப்பூமியின் வடக்கு மற்றும் தெற்கில் விவசாயமல்லாத பூமியாக உள்ளது. இப்பூமியின் இடையே நீர்வழித்தடம் மற்றும் கொப்பு போன்ற இனங்கள் ஏதும் செல்லவில்லை. இப்புலத்திற்கு கிழபுறம் T.S.No.28இல் 25 அடி அகல தென்வடல் இணைப்பு சாலை செல்கிறது. புலத்திற்கு மேற்குப்புறத்தில் T.S.No.3 இல் கிளை வாய்க்கால் செல்கிறது. இக்கிளை வாய்க்காலின் நீரானது இப்புலத்திற்கு பாசன வசதி அளிப்பதில்லை. மனுதாரரின் பூமியானது விவசாய பயிரினங்கள் ஏதுமின்றி தரிசு நிலமாக உள்ளது. மேலும், வடபுறத்தில் தற்போது உபயோகத்தில் இல்லாத சுவாமி விவேகானந்தா ITI கட்டிடமும் தென்புறத்தில் குடியிருப்பு வீடுகளும் உள்ளது.

மேற்படி உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கும் நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தேச மனைப்பிரிவின் சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை மூலைமுடக்கு, சாலை மற்றும் பொது உபயோக பரப்பினை நகராட்சிக்கு கீழ்காணும் விபரப்படி திரு.K.S. ஜெகதீசன் நெ.1 இணை சார் பதிவாளர் அலுவலகம், கோபிசெட்டிபாளையத்தில் தானபத்திரம் மூலம் பதிவு செய்து தானமாக நகராட்சிக்கு ஒப்படைக்கவும், ஒப்படைப்பு செய்த பின்னர் தொழில்நுட்ப அனுதி வேண்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப்படுகிறது. ந.க.எண். 1088 /2022/எப்1

1. சாலை மற்றும் மூலைமுடக்கு – 954.50 + 2.25 = 956.75 சதுர மீட்டர்
2. பொது உபயோகம் A = 20.61 சதுர மீட்டர்
3. பொது உபயோகம் B = 21.18 சதுர மீட்டர்

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**மனுதாரர் முழுமையாக உரிய ஆவணங்களை முழுவடிவில் அளிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.221**

2.இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை **2022**–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.** 222

3. இந்நகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் பொறியாளர் (பொ) அவர்களின் ஜூலை 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 223**

4. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜூலை 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 224**

5. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜூலை 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 225**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 3,4,5,7,9,10,11,12,13,15,23 மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்க இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 இன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 05.08.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.649/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களுக்கு வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 11 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.09.2022 முதல் 30.11.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 649/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.54.33 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2914/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.
**1,2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 226**

7. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/யு.பி.ஏ2 நாள்.19.03.2021 இல் சாலையோர வியாபாரிகளுக்கு Vending Certificate மற்றும் (Identification card) ஆகியவற்றினை உடனடியாக வழங்கி அறிக்கை சமர்பிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்நகராட்சியில் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் Vending Certificate வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.23 நாள்.29.05.2020 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதில் முதல் கட்டமாக ரூ.65130/– செலவினம் மேற்கொள்ளப்பட்டது. செலவினம் மேற்கொள்ளப்பட்டது போக ரூ.84870/– செலவினம் மேற்கொள்ளாமல் நிலுவையாக இருந்து வருகிறது.

தற்போது சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் Vending Certificate வழங்குவதற்கு ஏதுவாக மேற்காணும் விபரப்படி தயார் செய்ய 13.07.2021 இல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/யு.பி.ஏ2 நாள்.26.07.2021 இல் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச் சான்று 10.08.2021 முன் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதியுடன் குறைவான விலைவிகிதம் அளித்த Parthi Info Tech,5/5 2nd Vedathalangadu, Karuvampalayam, Tiruppur. நிறுவனத்தாருக்கு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.3048/2014/எப்1 நாள்.10.08.2021 இல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், மேற்காணும் பணியினை Parthi Info Tech, Tiruppur நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு 515 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச்சான்று (Vending Certificate) தயார் செய்து வழங்கப்பட்ட வகையில் ரூ.1,33,694/– வழங்குமாறு 18.04.2022 ஆம் நாளிட்ட பட்டியலில் கோரப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.120 நாள்.23.08.2021 இல் ரூ.84,870/– க்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக ரூ.48,824/– செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3048/2014/எப்1)

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 227**

8. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.03.08.2022 இல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு சார்பு கட்டிடங்களுக்கு தற்போது உள்ள வரிவிதிப்பிலிருந்து 01.04.2022 முதல் 50% வரி உயர்வு செய்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது,

அதன் அடிப்படையில் கோபி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு சார்பு கட்டிடங்களுக்கு தற்போது உள்ள வரிவிதிப்பிலிருந்து 01.04.2022 முதல் 50% வரி உயர்வு செய்து சொத்துவரி பொது சீராய்வு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்.684/2022/அ1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 228**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 57 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s S.S. Engineerrs,3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 05.08.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.545.50/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.09.2022 முதல் 30.11.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.545.50/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 57 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.28.30/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.எண். 1231/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 229**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது

இந்நிலையில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 05.08.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ. 690/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாதகாலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளிள் தூய்மைப் பணிகளில் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.09.2022 முதல் 30.11.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.11.93 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2417/2020/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 230**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 24,25,28,29 மற்றும் 30 (புதிய வார்டுகள்) ஆகிய வார்டுகளில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்க இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 இன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மேலும், M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 05.08.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.690/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாதகாலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 5 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.09.2022 முதல் 30.11.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.18.83 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2415/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 231**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2021–2022 ம் நிதியாண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி வாரியாக தணிக்கைக்கு கணக்குகள் தயார் செய்து கொடுக்கும் பணிக்கு 12.08.2022 ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | G.பிரியதர்ஷினி M.Sc<br>த/பெ கணேசன்<br>தோக்கவாடி<br>திருச்செங்கோடு | ரூ.85000/– |
| 2 | K.V. நிரஞ்சனி M.Sc (C.S)<br>த/பெ வைரவேல்<br>E 189 கூட்டப்பள்ளி காலனி<br>திருச்செங்கோடு – 637214<br>நாமக்கல் மாவட்டம் | ரூ.75000/– |
| 3 | B.சுபத்ரா<br>த/பெ பாலசுப்ரமணியம்<br>தேவனாங்குறிச்சி<br>திருச்செங்கோடு | ரூ.95000/– |

**அலுவலக குறிப்பு:–**

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண் 2 ல் K.V. நிரஞ்சனி த/பெ வைரவேல் திருச்செங்கோடு என்பவரது குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**வரிசை எண்.2 K.V.நிரஞ்சனி – ன் குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண். 232**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் (SBM) 2.0 திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை –க்காக 2 MT திறன் கொண்ட நுண் உரம் செயலாக்க மையம் (Micro Compost Center) ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட 3 வது மாநில உயர் அதிகார குழுவினால் கீழ்கண்ட நிதி அமைப்பில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20860/2022/SBM நாள்.25.07.2022 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S. No | Name of the ULB | Population | Funding Pattern GOI:TN | No of MCC | Capacity (MT) | Project cost (In Lakhs) | Cen tral share | State share | ULB share |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Gobichettipalayam | 59523 | 50% , 33% | 1 | 2 | 23.00 | 11.50 | 7.59 | 3.91 |

மேற்கண்ட நிதி ஆதார அமைப்பில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் உரக்கிடங்கில் 2 TPD திறன் கொண்ட நுண் உரம் செயலாக்க மையம் (MCC) அமைத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எ.ண்.1725/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. நகராட்சி பங்கு தொகை ரூ.3.91 இலட்சத்தினை SVL –யில் இருந்து செலவிடலாம் .

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 232**

14. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 24.08.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம்
2. நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **ஆண்டு குத்தகை இனங்கள்** | **ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட ஆண்டு குத்தகை தொகை ரூ.** | **ஏலக் கேள்வி** |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| 1 | நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு.கே.கே.சின்னசாமி த/பெ. குப்பிச்சி கவுண்டர், 28/1, சிவசக்தி நகர், சென்னிமலை ரோடு, பெருந்துறை | ரூ.7,29,999/– (பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/– உட்பட) | இல்லை |
| | | திரு.என்.வெங்கடாசலம் த/பெ. நாச்சிமுத்து, 128, பெரிய வேட்டுவபாளையம், பெருந்துறை | ரூ.6,99,000/– (பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/– உட்பட) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமதி.எம்.பார்வதி,<br>8/2ஏ, நாச்சம்மாள் லே–அவுட்,<br>டி.வி.பட்டணம்,<br>உடுமலைப்பேட்டை 642126 | **ரூ.12,25,000/– (பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/–** உட்பட) | |
| | | திரு.வி.சுப்பிரமணியன்,<br>த/பெ. வையாபுரி (லேட்),<br>16சி. எருமைக்கார தெரு,<br>திண்டுக்கல். | ரூ.10,40,000/– (பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/– உட்பட) | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண். 1 ல் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனமான மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு முதல் ஆண்டுக்கு பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/– ம், அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு 10 சதவீதம் சேர்த்து வசூல் செய்யப்படவேண்டும்.

அதன்படி திருமதி.எம்.பார்வதி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.12,25,000/– ல் பணியாளர் சம்பளம் ரூ.3,01,290/– கழித்தது போக ரூ.9,23,710/– குத்தகை தொகையாக உள்ளது. மேற்படி குத்தகை தொகை ரூ.9,23,710/– மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் குறிப்பிட்ட தொகையை விட கூடுதலாகவும், சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ. 6,85,755/– ஐ விட ரூ.2,37,955/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.6,79,566/–ஐ விட ரூ. 2,44,144/– கூடுதலாகவும் உள்ளது.

எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள திருமதி.எம்.பார்வதி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

ஏலம் போகாத நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண். 1014/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**1). திருமதி.எம்.பார்வதி –ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2).ஏலம் போகாத இனத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான் எண்.234**

15. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணியினை செய்வதற்கு 12.07.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் லாரி TN 36 D 2709 –க்கு பராமரிப்பு பணிகள் அனைத்து பழுதுகளும் நீக்கம் செய்து FC பெற்று தரும் பணி | 1,10,000 | **காந்தி மோட்டார்ஸ் ஈரோடு** | **ரூ. 108650.00** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **ஆட்டோ சர்வீஸ் சென்டர் திருப்பூர்** | **ரூ. 109100.00** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**ந.க.எண். 1207/2022 /இ1**
<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **காந்தி மோட்டார்ஸ் ஈரோடு** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**காந்தி மோட்டார்ஸ் ஈரோடு –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.108650.00 அங்கீகரிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான் எண்.235**

16. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 26.07.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி மினி ஹை மாஸ்ட் கோபுர விளக்கு புதிய 120 வாட்ஸ் Led மின் விளக்குகள் விநியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல் | 3,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**ந.க.எண்.1502/2022 /இ1**

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

அ) 1. மேற்படி பணியி வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**M/s சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான் எண்.236**

17. இந்நகராட்சிக்கு சொந்தமான நகரவை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அறிவுசார்மையம் கட்டும் பணிக்கான அப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்து விழும் நிலையில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி பொது ஏல அறிவிப்பினை தமிழ் தினசரி நாளிதழில் (தினகரன்) 01.07.2022 ம் தேதி விளம்பரம் செய்தற்கான கட்டணத்தொகை (SGST , CGST சேர்த்து) ரூ.4,284 /– செலுத்த கோரி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ஈரோடு அவர்களிடமிருந்து பில் பட்டியல் வரபெற்றுள்ளது.

எனவே விளம்பரம் கட்டணத்தொகை ரூ.4,284 /– யினை மக்கள் தொடர்பு அலுவலர் ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.897/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம் .

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான் எண்.237**

18. நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளிகள் e–tender வழியாக கோரப்படுகிறது, e–tender முறையில் பயன்படுத்தப்பட்டு வரும் e–token (Digital signature card ) Dsc நமது அலுவலகத்திற்கு Commissioner , Manager , Asst Engineer , Sanitary inspector ஆகியோருக்கு உள்ளது. இதில் தற்பொழுது Asst Engineer , Mrs.S.Gomathi & Sanitary Inspector Mr.M.Karthik ஆகியரின் Dsc Valid காலம் முடிவடைந்துவிட்டது . (AE –25.07.2022 , SI –23.06.2022) மேற்கண்ட இரு DSC–E – token Renewal செய்ய வேண்டும் , இதனை வழங்கிய நிறுவனமான Digital Identity , Trichy மூலமாக Renewal செய்து கொள்ளலாம். அதற்கான செலவின தொகை ரூ.7000 /–ஆகும்.

எனவே மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் , பட்டியல் தொகை பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் , மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந,க.எண்.1666/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான் எண்.238**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் நகரின் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் கீரிப்பள்ள ஓடை சாக்கடை நீர் செல்லும் குறுக்கு கால்வாய் உள்ளிட்ட நகரின் சில பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளை உயிருடன் பிடித்து நகருக்கு வெளியே மலைப்பாங்கான பகுதிகளில் உயிருடன் அப்புறப்படுத்தும் பணிக்கு பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 10.08.2022 ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1 | திரு. P. மூர்த்தி,<br>போடி லைன்,<br>பாலாஜி அப்பார்மெண்ட் எதிர்புறம்,<br>எல்லீஸ் நகர்,<br>மதுரை – 625016. | 365/- |
| 2 | திரு. G. பிரசாத்,<br>இந்திரா பிரியதர்ஷினி நகர்,<br>கே. சாலைப் புதூர்,<br>திண்டுக்கல். | 345/- |
| 3 | திரு. M. கோவர்தன்,<br>பிளாக் எண். 33, பொன்மேனி,<br>முத்துபாளையம் நகர்,<br>மதுரை – 625016 | 300/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3 இல் குறிப்பிட்டுள்ள திரு. M. கோவர்தன், பிளாக் எண். 33, பொன்மேனி, முத்துபாளையம் நகர், மதுரை – 625016 அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளது என்பதால் அதனை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2480/2021/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**1) வரிசை எண்.3 M.கோவர்த்தன் –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2) அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான் எண்.239**

20. இந்நகராட்சியின் ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் உள்ள மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யும் நுண் உரக்கூடத்தில் (Micro Composting Centre) கழிவுகளை துகள்களாக அரைக்கும் இயந்திரத்தில் உள்ள Shredding Machine இல் சுழலும் சக்கரமும் அதில் பொருத்தப்பட்டுள்ள பிளேடுகள் 6 எண்ணிக்கையும் முழுவதும் தேய்ந்து உள்ளது. எனவே, மேற்படி அரைக்கும் இயந்திரத்திற்கு புதியதாக 750 mm dia, 16 mm Thickness, Shatt dia 70 mm மற்றும் 450 mm நீளமும் கொண்ட சுழலும் சக்கரம் (Wheel) 1 புதியதாகவும், அச்சக்கரத்தில் 12 mm Thickness, 120 width மற்றும் 300 mm நீளமும் கொண்ட சுழலும் பிளேடுகள் 6 எண்ணிக்கையும் மற்றும் அதற்கான போல்ட் நட்டுகள் புதியதாக கொள்முதல் செய்து பொருத்தி இயந்திரத்தை சர்வீஸ் செய்து கொள்ளவும், பல்வரைசர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டு இயங்கி வரும் Conveyer Belt – ட்டும் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பழுதான Conveyer Belt ஐ மாற்றி விட்டு புதியதாக 6m Lenth, 1m Width 3Ply மற்றும் 12mm Thick கொண்ட Conveyer Belt ஐ கொள்முதல் செய்து கொள்ளவும், இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள பழுதான மோட்டார் ஸ்டாட்டர் பாக்ஸ்யை மாற்றி புதிய ஸ்டாட்டர் பாக்ஸ் பொருத்தி கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 93,000/- ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.834/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான் எண்.240**

21. இந்நகராட்சியின் கரட்டூரில் பகுதியில் அமைந்துள்ள மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யும் நுண் உரக்கூடத்தில் (Micro composting Centre) கழிவுகளை துகள்களாக அரைக்கும் இயந்திரத்தில் உள்ள Shredding Machine ற்கு புதியதாக 750mm dia, 16mm thickness, Shatt dia 70 mm மற்றும் 450 mm நீளமும் கொண்ட சுழலும் சக்கரம் 1 புதியதாகவும், அச்சக்கரத்தில் 12 mm Thickness, 120 width மற்றும் 300 mm நீளமும் கொண்ட சுழலும் பிளேடுகள் 6 எண்ணிக்கையும் மற்றும் அதற்கான போல்ட் நட்டுகள் புதியதாக கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 23.08.2022 அன்று பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1. | FINE AIR SYSTEM,<br>72, RANGANATH STREET,<br>VENKITAPURAM,<br>COIMBATORE – 641013 | ரூ. 42,520/–<br>(Inclusive Of all taxes) |
| 2. | ECO ENVIRONS SOLUTIONS,<br>20/2, INDIRAGANTHI STREET,<br>PALAIYAPALAYAM,<br>ERODE – 638011 | ரூ. 41,989/–<br>(Inclusive Of all taxes) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ECO Environs Solutions, 20/2, Indira Ganthi Street, Palaiyapalayam, Erode – 638011 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0834/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான் எண்.241**

22. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 36 J 6855 இன் தகுதி சான்று காலம் 15.08.2022 ஆம் தேதியுடனும், வாகனம் எண். TN 36 AA 4495 இன் தகுதி சான்று காலம் 18.08.2022 ஆம் தேதியுடனும் முடிவடைகிறது. இவ்வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 23.08.2022 இல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | காந்தி மோட்டார்ஸ், கே.கே.கார்டன்,<br>சி.எம்.நகர், கே.கே.எஸ்.கே லெதர்<br>பேக்டரி, ஆர்.என்.புதுர்,<br>ஈரோடு – 638 005. | 2,55,700/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ<br>சர்வீஸ்,சென்டர் 1, ராஜு நகர்,<br>போயம்பாளையம்,<br>திருப்பூர் 2. | 2,56,950/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் ரூ.2,55,700/– அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமான காந்தி மோட்டார்ஸ், கே.கே.கார்டன், சி.எம்.நகர், கே.கே.எஸ்.கே லெதர் பேக்டரி, ஆர்.என்.புதூர், ஈரோடு – 638005 பணிமனைதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.1646/2022/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : 1. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
2.குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்தினரிடம் பழுதுகள் செப்பணிட்டு தகுதி சான்று புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3.இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.242**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள மொடச்சூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் உள்ள கட்டிடத்தில் தரை ஓடு , UPVC கதவு , ஜன்னல் மற்றும் மின் உபகரணங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.மேற்படி வகுப்பறையில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.30 இலட்சத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் மேற் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. (ந.க.எண்.414/2019/இ1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.243**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி